முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2026 யூலை

General Certificate of Education (Adv. Level) 3rd Term Exam – 2026 July

மனைப்பொருளியல் - I Home Echonomics - I	Grade 12	T	28	மூன்று மணித்தியாலம் பத்து நிமிடம்

அறிவுறுத்தல்:

1. ***எல்லா*** வினாக்களுக்கும் விடை தருக.
2. விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை எழுதுக**.
3. விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
4. ***1*** தொடக்கம் ***30*** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்க்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் ***சரியான*** அல்லது ***மிகப்பொருத்தமான*** விடையைத் தெரிந்தெடுத்து **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (X)** இடுவதன் மூலம் காட்டுக.
5. **கணிப்பான்களைப் பயன்படுத்த இடமளிக்கப்படமாட்டாது**

பகுதி - I

1. மனிதன் தனது வாழிடமாக ஒதுக்கிக் கொள்ளும் அல்லது நிர்மாணித்துக் கொள்ளும் மூடிய வெளியே,
1. கட்டடங்கள் மற்றும் நிலத்தோற்றம்
2. கிராமிய மற்றும் நகர்ப்புறச் சூழலை உருவாக்கல்
3. சமூக வாழ்க்கைச் சூழல்
4. பௌதீக வாழ்க்கைச் சூழல்
5. உள்ளக வெளி

2. சூழல் சார் வடிவமைப்பின் போது கவனத்திற் கொள்ளப்படும் பயன்பாட்டுக் காரணிகளாவன,
1. பொருத்தப்பாடு, கலைத்துவம்
2. பெறுமானத்தொகுதி, சந்தம்
3. கலைத்துவம், விகிதசமம்
4. வடிவம், விகிதசமம்
5. சந்தம், இழையமைப்பு

3. தற்காலத்தில் நிலைபேறான கட்டடங்களை அமைக்கும் போது ஒரு உத்தியாகப் பயன்படுத்தப்படுவது,
1. பசுமைக் கட்டடங்களை அமைத்தல்
2. நவீனத்துவம் பேணல்
3. அழகியல் தன்மையைப் பேணல்
4. பாரம்பரியம் பேணல்.
5. தொழிற்படுதன்மை பேணல்

4. செங்கற்சுவர்கள் தடிப்பானவையாகையால் எத்திசையில் அமைக்கும் சுவர்களுக்கு மிகவும் பொருத்தமானது,
1. வடக்கு - கிழக்கு
2. தெற்கு - வடக்கு
3. வடக்கு - மேற்கு
4. கிழக்கு - மேற்கு
5. தெற்கு - மேற்கு

5. உட்புறவெளியை நிர்மாணிக்கும் போது பயன்படுத்தும் துணைக்கூறுகளில் அடங்காதது,
1. ஒளியூட்டம் 2. இயற்கையான பகல் ஒளி 3. தடாகம்
4. தளபாடங்களும் உபகரணங்களும் 5. சுவர், நிலம்

6. பெரும் போசணை மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய சக்திப் பெறுமானம் பற்றிய சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளது. சமைக்கப்பட்ட 200g உருளைக்கிழங்கு, 70g மீன் ஆகியவற்றிலிருந்து பெறக்கூடிய சக்தியை கிலோ கலோரியில் காண்க,
1. 1120 கிலோகலோரி 2. 1100 கிலோகலோரி 3. 1140 கிலோகலோரி
4. 1150 கிலோகலோரி
5. 1200 கிலோகலோரி

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது | All Rights Reserved

7. அடினோசின், பயோட்டின், கல்சிபெரோல் ஆகிய இரசாயனப் பெயர்களைக் கொண்ட விற்றமின் வகைகள் முறையே,

1. விற்றமின் B7, B8 மற்றும் D ஆகும்
2. விற்றமின் B8, B7 மற்றும் D ஆகும்
3. விற்றமின் B4, B3 மற்றும் E ஆகும்
4. விற்றமின் B9, B3 மற்றும் E ஆகும்
5. விற்றமின் B3, B9 மற்றும் K ஆகும்

8. அயடீன் கரைசல் சில துளிகள் யாதேனும் ஒரு பதார்த்தத்துடன் கலக்கும் போது கருநீல நிறத்தைத் தோற்றுவிக்குமாயின் அப்பொருள்,

1. தேங்காய் எண்ணெய்
2. முட்டை வெண்கரு
3. குளுக்கோசு கரைசல்
4. மாப்பொருள் கரைசல்
5. சீனிக் கரைசல்

9. பின்வருவனவற்றில் காய்கறிகளின் போசணைப் பெறுமானம் சம்பந்தமான கூற்றாக அமைவது,

A. இரும்புக் கனியத்தைப் பெற உதவுதல்
B. 1-2% புரதம் அடங்கியிருக்கும்
C. என்பு, பற்களின் வளர்ச்சிக்கு அவசியமாகும்
D. உடலுக்கு β கரோட்டின் வழங்குதல்
E - உடலுக்கு ஒட்சியெதிரிகளை வழங்குதல்

1. Aயும் Cயும்
2. A, B மற்றும் Eயும்
3. Aயும் Dயும் Eயும்
4. Cயும் Dயும்
5. Aயும் Cயும் Dயும்

10. திரிச்சின் நொதியம் சுரப்பதை நிரோதிக்கும் இரசாயனப் பொருள் உள்ளடங்கிய உணவுப் பொருளாக அமைவது,

1. சோயா அவரை, பயற்றை, போஞ்சி
2. போஞ்சி, வெண்டி, மரவள்ளி
3. சோயா அவரை, கோவா, போஞ்சி
4. மரவள்ளி, கோவா, பயற்றை
5. பயற்றை, வெண்டி, முள்ளங்கி

11. புரதம் $\xrightarrow{Y}$ பொலிப்பெப்தைட்டு (புரற்றியோசு + பெத்தோன்) மேற்காட்டப்பட்ட உணவுச் சமபாடு, அகத்துறிஞ்சல் சம்பந்தமான வரிப்படத்தின் y ஆக இனங்காணப்படுவது,

1. இலைபேசின்
2. ரெனின்
3. பெப்திடேசு
4. பெப்சின்
5. திரிச்சின்

12. நுண்ணங்கி வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் புறக் காரணிகளைக் கொண்ட தொகுதி முறையே,

1. இரசாயனப் பதார்த்தம், நுண்ணுயிர்க் கொல்லிகள்
2. வெப்பநிலை, ஈரலிப்பு
3. போசணைப் பதார்த்த அளவு, இரசாயனப் பதார்த்தம்
4. ஒட்சியேற்ற / தாழ்த்தல் அழுத்தம், வெப்பநிலை
5. pH பெறுமானம், போசணைப் பதார்த்த அளவு

13. * மீண்டும் மீண்டும் பயன்படுத்தலாம்

* எண்ணெய்யை ஓரளவுக்கு ஊடுபுகவிடக்கூடியது
* வலிமையானது, விலை உயர்வானது
* மென்பானப் போத்தல், மெகாப் போத்தல் இவ்வகையில் அடங்கும்

மேற்குறித்த பண்பைக் கொண்டுள்ள பொதியிடலுக்காகப் பயன்படுத்தும் பொலித்தீன் வகையானது,

1. பொலி எசுத்தர்
2. பொலி எதிலீன் ரெரிதலேற்று
3. பொலி புரோப்பிலின்
4. அடர்த்தி கூடிய எதிலின்
5. அடர்த்தி குறைவான பொலி எதிலின்

 முழுப்பதிப்புரிமையுடையது / All Rights Reserved

14. உடலுக்கு நீண்ட காலமாக போதியளவு போசணைக் கூறுகள் கிடைக்காமல் போவதால் போசணைக் குறைபாடு ஏற்படுகின்றது. இதற்கான காரணங்களாக அமையாதது,
1. நுண்மதி வளர்ச்சி பாதிப்படைதல்
2. வறுமை
3. நிறையுணவு கிடைக்காமை
4. அடிக்கடி நோய்களுக்கு ஆளாதல்
5. வேலைப்பளுமிக்க பரபரப்பான வாழ்வுக்கு ஆளாதல்.

15. உக்கிரமான குறையூட்டத்தினைக் காட்டும் ஐந்து வயதை விடக் குறைவான பிள்ளைகள் அதிகமாகக் காணப்படும் மாவட்டம்,
1. கிளிநொச்சி 2. பதுளை 3. நுவரெலியா 4. யாழ்ப்பாணம் 5. திருகோணமலை

16. விற்றமின் A குறைபாட்டு நோயின் அறிகுறிகளாக அமைவது,
A. கண்களில் பீற்றோபுள்ளி தோன்றுதல்
B. உடல் வளர்ச்சி குன்றுதல்
C. தோல், தலைமயிர் ஆகியவற்றின் உலர்வான தன்மை ஏற்படல்
D. அதிக களைப்பு
E. உணவில் விருப்பக் குறைவு.
(1) A, B (2) A, C (3) B, D (4) D, E (5) C, D

17. BMI பெறுமானம் தொடர்பான விதந்துரைப்பின்படி உயரத்துக்கமைய நிறை போதுமானதன்று எனும் கூற்று சுட்டிக்காட்டும் பெறுமான அளவு,
1. 18.5 - 24.9
2. 25.0 - 30
3. 18.5 இலும் குறைவு
4. 30 இற்கு மேல்
5. 18.5 - 22.5

18. * உடலில் நீர்ப்பீடனம் குறைவடைதல்
* தோல் சொரசொரப்பாதல்
* உடல் வளர்ச்சி சீராக நிகழாமை
* உடலில் காயங்கள் ஆறுவதில் தாமதம்
* உணவில் விருப்புக் குறைவு
மேலே குறிப்பிடப்பட்டுள்ள நோய்க்கான அறிகுறிகள் எக்கனியக் குறைபாட்டினால் ஏற்படுகின்றது?
1. அயடீன் 2. கல்சியம் 3. நாகம் 4. இரும்பு 5. சோடியம்

19. போசணைப் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கென செயற்படும் அரசு, அரசுசாரா நிறுவனங்கள் முறையே,
1. வைத்தியர் சங்கம், அரிமா கழகம்
2. மாகாண சுகாதார அமைப்பு, பெண்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
3. உலக வங்கி, விவசாய அமைச்சு
4. பெண்கள் அமைப்புக்கள், பெண்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
5. விவசாய அமைச்சு, யுனிசெப்

20. அன்னாசி மணத்தைப் பெறப் பயன்படுத்தும் செயற்கை மணமூட்டி,
1. மொனோசோடியம்
2. சக்கரீன்
3. ஈதயில் அசிற்றேற்று
4. மொனோ சோடியம் குளுட்டமேற்று
5. எமைல் பியூற்றேற்று

21. சான்விச் வகைகளை முன்வைக்கும் போது கவனம் செலுத்த வேண்டிய விடயம்,
1. அதிகுளிரூட்டியில் பாணைச் சேமித்தல்.
2. சூடான பாணைப் பயன்படுத்தல்.
3. தயாரித்து வைக்கும் போது ஈரத்துணியால் மூடுவதைத் தவிர்த்தல்.
4. பாண் துண்டுகளாக வெட்டப்படாமை.
5. துண்டுகளாக்கிய பாணை ஒரு நாள் குளிரூட்டியில் வைத்தல்.

22. வளைவான ஊசி பயன்படுத்தித் தைக்கப்படும் தையலானது,
1. சங்கிலித்தையல்
2. மறைப்புத்தையல்
3. ஓவர்லோக் தையல்
4. நரம்புத்தையல்
5. சற்றின் தையல்


PAST PAPERS WIKI

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

23. மேசை விரிப்பில் மேசை விளிம்பிலிருந்து கீழே விழவிடும் துணியின் அளவு

1. 45 cm 2. 115 cm 3. 100 cm 4. 40 cm 5. 30 cm


24.




இவ் உரு குறிப்பது,

1. பட்டு நாரின் குறுக்கு வெட்டுமுகம்
2. பட்டு நாரின் நெடுக்கு வெட்டுமுகம்
3. கம்பளி நாரின் நெடுக்கு வெட்டுமுகம்
4. பருத்தி நாரின் நெடுக்கு வெட்டுமுகம்
5. லினன் நாரின் குறுக்கு வெட்டுமுகம்

25. உரு A உரு B





A, B குறிக்கும் முறையே,

1. பாவுவிலா, ஊடைவிலா
2. ஊடைவிலா, பாவுவிலா
3. சரிவுக்கோட்டுநெசவு, ஊடைவிலா
4. சற்றீன் நெசவு, பாவுவிலா
5. சரிவுக்கோடு, சற்றீன் நெசவு

26. எதிர்ப்பு முறை அச்சுப்பதித்தல் என அழைக்கப்படுவது,

1. பத்திக் முறை
2. உருளை முறையில் அச்சிடல்
3. திரை அச்சிடல்
4. உருவரை தகட்டு முறை அச்சிடல்
5. துணியில் அச்சுப்பதித்தல்

27. எழுத்து மூலத் தொடர்பாடலின் அனுகூலங்களுள் அடங்காதது,

1. விரைவாகத் தொடர்பாடலை மேற்கொள்ள முடியும்
2. மீண்டும் மீண்டும் வாசிக்க முடியும்
3. மீள்பாவனைக்கென கோவைப்படுத்த முடியும்
4. நிருபிக்கக் கூடிய ஆற்றலுடையது
5. சிறப்பாகப் பேண முடியும்

28. நேர்முகப் பரீட்சையின் போது செய்யக்கூடிய விடயங்களுள் அடங்குவது,

1. குரலை உயர்த்திப் பேசுதல்
2. ஆசனத்தில் சாய்வாக அல்லது குறுக்காக அமர்தல்
3. காலின் மேல் கால் போடாது அமர்தல்
4. கைகளை இரண்டு பக்கங்களுக்கும் அசைத்தவாறு கருத்துத் தெரிவித்தல்
5. சுவிங்கம் அல்லது வேறு உணவுகளை மெல்லுதல்

29. சுற்றுப் பயணத்தின் பிரதான பேதங்களுள் ஒன்று,

1. உள்நாட்டுச் சுற்றுப் பயணம்
2. உள்வாரிச் சுற்றுப் பயணம்
3. தேசிய சுற்றுப் பயணம்
4. குழுநிலைச் சுற்றுப் பயணம்
5. வலயத்துக்கான சுற்றுப் பயணம்

30. சுற்றுாடல் சார்ந்த நேர்வகையான தாக்கங்களில் ஒன்று,

1. தொழில் வாய்ப்புக் கிடைத்தல்
2. பண்பாட்டு மரபுரிமை
3. பிரதேச அபிவிருத்தி
4. சூழல் மேம்படுதல்
5. பொருளாதாரப் பொசிவு

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது | All Rights Reserved

பகுதி – II

முதலாம் வினா உட்பட ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

1.

1. வர்ணங்களின் இயல்புகள் இரண்டினைப் பெயரிட்டு அவற்றை அறிமுகப்படுத்துக?
2. நிலத்தோற்றம் எத்தனை வகைப்படும்? அவை எவை?
3. உணவிலுள்ள கொழுப்பை இனங்காண்பதற்கான பரிசோதனைகள் 2 தருக?
4. இரைப்பை அழற்சி நோய் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 2 தருக?
5. உணவிலுள்ள இரும்பை எவ்வாறு வகைப்படுத்தலாம்? (உ+ம்) தருக?
6. யோகட் உற்பத்திச் செயன்முறைக்குத் தேவையான மூலப்பொருட்கள் 4 தருக?
7. ஆரம்ப காலங்களிலே ஆடை உற்பத்தியில் முன்னேற்ற நிலையில் காணப்பட்ட நாடுகள் எவை?
8. விசேடமான நார்வகைகள் 2 தருக?
9. ஆளிடைத் தொடர்புகளை வளர்த்துக் கொள்வதற்கு முக்கியமாக அமையும் திறன்கள் 2 தருக?
10. செயலூக்கமுள்ள ஓய்வுநேரச் செயற்பாடுகளை எத்தனை வகைப்படுத்தலாம்? அவை எவை?

(10x2 = 20 புள்ளிகள்)

2.

1. நீர் நுகர்வை இழிவாக்குவதற்கு மேற்கொள்ளும் வழிமுறைகள் 3 தருக?
2. மனிதன் வாழ்க்கைச் சூழலை நிர்மாணிப்பதன் முக்கிய நோக்கங்கள் மூன்றைக் குறிப்பிடுக?
3. தொழிற்படு தன்மையின் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் மூன்றைக் குறிப்பிடுக?
4. வடிவமைப்புக் கோட்பாடுகளைக் குறிப்பிட்டு அவற்றில் இரண்டை விளக்குக?

(2 + 2 + 3 + 3 = 10 புள்ளிகள்)

3.

1. புரதத்தின் தொழிற்பாடுகள் மூன்று தருக?
2. குளுக்கோசை இனங்காண்பதற்கான பரிசோதனை ஒன்றினைக் குறிப்பிட்டு விளக்குக?
3. அத்தியாவசிய அமினோ அமிலம் என்றால் என்ன? அதற்கு இரண்டு உதாரணம் தருக?
4. பெருங்குடலினால் ஆற்றப்படும் தொழிற்பாடுகள் நான்கைக் குறிப்பிடுக?

(2 + 2 + 3 + 3 = 10 புள்ளிகள்)

4.

1. பிள்ளையொருவர் குறையூட்டத்தினால் அவதியுறுவதை இனங்கண்டு தடுப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய உணவுக்கோல வழிமுறைகள் மூன்றினைக் குறிப்பிடுக?
2. பிள்ளைப்பருவம், கட்டிளமைப்பருவம், வயோதிபப்பருவம் என்பனவற்றின் போது கல்சியக் குறைபாட்டினால் ஏற்படும் நோய் நிலைமைகளைக் குறிப்பிடுக?
3. மலச்சிக்கல் உடைய ஒருவருக்கான ஒருநாளைக்கான உணவுப்பட்டியலைத் திட்டமிடுக?
4. (a) உயிர்க்காப்பு முதலுதவி என்றால் என்ன?
   (b) ஆடையில் தீப்பற்றும் போது எவ்வாறான முதலுதவியினை மேற்கொள்ள வேண்டும்?

(2 + 2 + 3 + 1 ½ + 1 ½ = 10 புள்ளிகள்)

5.

1. உணவுப் பழுதடைதல் என்றால் என்ன?
2. பழுதடைந்த உணவில் தென்படும் மாற்றங்கள் நான்கைக் குறிப்பிடுக?
3. உணவு பழுதடைவதில் தாக்கம் செலுத்தும் பௌதிகக் காரணிகள் மூன்றைக் குறிப்பிடுக?
4. உணவுப் பழுதடைவதில் தாக்கம் செலுத்தும் உயிர்ரசாயனச் செயற்பாடுகளில் ஒன்றான கபில நிறத்தாக்கம் தொடர்பாக விளக்குக.

(2 + 2 + 3 + 3 = 10 புள்ளிகள்)

Past Papers Wiki

 (முழுப்பதிப்புரிமையுடையது | All Rights Reserved)

6.

1. மனிதனால் உற்பத்தி செய்யப்பட்ட நார்களை வகைப்படுத்தி ஒவ்வொன்றுக்கும் உதாரணம் தருக?
2. உயரிய நேர்த்தி கொண்ட ஆடையைச் சந்தைக்கு முன்வைப்பதற்கு தரச் செவ்வை பார்ப்பதன் முக்கியத்துவம் 3 தருக?
3. (a) முற்பரிகரிப்புச் செயன்முறைகள் 2 தருக?
   (b) நொதியச் சலவையின் இயல்புகள் 2 தருக?
4. (a) குறும் பாவாடையை நிர்மாணிப்பதற்கான அடிப்படைப் படிமுறைகள் எத்தனை? அவை எவை?
5. (b) "அப்பிளிக்கே" என்பதனால் கருதப்படுவது யாது?

(2 + 2 + 3 + 3 = 10 புள்ளிகள்)

7.

1. வினைத்திறனான தொடர்பாடலின் சிறப்பம்சம் மூன்றைக் குறிப்பிடுக?
2. தொலைபேசிப் பயன்பாட்டின் போது செய்யக் கூடிய விடயம் நான்கைக் குறிப்பிடுக?
3. ஒழுகலாறு வகைகள் மூன்றையும் குறிப்பிட்டு அவற்றை விளக்குக?
4. நேர்முகப் பரீட்சையின் போது பொதுவாக வினவப்படும் வினாக்களை வகைப்படுத்தி அதற்கு உதாரணம் தருக.

(2 + 2 + 3 + 3 = 10 புள்ளிகள்)

8. சிறுகுறிப்பு விரும்பிய நான்கை விளக்குக.

1. சூழமைவு
2. மிகைக் கொழுமை (மிகையூட்ட நிலைமை)
3. நீரிழிவு
4. பத்திக் முறை
5. ஓய்வு நேரச் செயற்பாடுகள்

(2 ½ x 4 = 10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library